# O.S. No. 488 / 2021

# 04.11.2022

**வ.த.சா.1, திருமதி. ஜோதி, க/பெ. பார்த்திபன்**

சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து காலி செய்வதற்காக தாவா வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் ஒரு சகோதரரும், ஒரு சகோதரியும் உடன் பிறந்தவர்கள் ஆவர். எனக்கு முதல் திருமணம் சிறு வயதில் நடந்ததால், அது எப்போது நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது முதல் கணவர் இரமேஷ். அவருடன் நான் வில்லிவாக்கத்தில் குடும்பம் நடத்தினேன் என்ற சொன்னால் அது எனக்கு ஞாபகம் இல்லை. முதல் திருமணத்தின் மூலமாக எனக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். முதல் கணவரின் அவருடைய பெற்றோர் வீட்டில் தான் நான் வசித்தேன். ஆனால் நான் முதல் கணவருடன் குடும்பம் நடத்தவில்லை. எனது இரண்டாவது கணவர் பார்த்திபனுடன் மணலியில் 2012 மற்றும் 2013 ஆகிய இரண்டு வருடங்கள் வசித்தேன். நான் தற்போது எனது பெற்றோரின் வீட்டில் தான் வசித்து வருகிறேன். எனது தகப்பனாருக்கு உடல் நிலை சரியில்லாததால் அவரை பராமரிக்க வேண்டும் என்பதற்காக மணலியிலிருந்து எனது பெற்றோர் வீட்டிற்கு நான் வந்துவிட்டேன். இரண்டாவது கணவரின் மூலம் எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். பிரதிவாதி தனது கணவரையும் மாமனாரையும் கொடுமைப்படுத்தினார் என்று எனது எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கும் எனது அண்ணன் தேவராஜிற்கும் 2013 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணம் பெற்றோர்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி நடந்தது என்றால் சரிதான். பிரதிவாதி எப்போது

முதலில் கர்பபம் உற்றார் என்று எனக்கு தெரியாது. திருமணமாகி இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் பிரதிவாதி கர்ப்பம் உற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி மீண்டும் கருவுற்றது எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு எனது அண்ணன் மூலம் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றாலும் அந்தக் குழந்தைக்கு தற்போது 7 வயது என்றாலும், அதுபற்றி எனக்கு தெரியாது. அந்தக் குழந்தை தற்போது முகப்பேரிலுள்ள பள்ளியில் 2 ஆம் வகுப்பு படித்து வருகிறார் என்றாலும், பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றாலும் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 4 மாதங்கள் மட்டும் தாவா சொத்தில் பிரதிவாதி வசித்து வந்தார் என்று நான் சொல்லியுள்ள விவரங்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தின் 3 வது பத்தியில் 26.11.2015 அன்று பிரதிவாதி தன்னுடைய நகைகள் மற்றும் உடைமைகளை எடுத்துக்கொண்டு தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ள விவரங்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனது பெற்றோரை அவதூறான முறையில் நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் தேவராஜ் இறப்பதற்கு 4 நாட்கள் முன்பாக பிரதிவாதி பாண்டிச்சேரிக்கு சென்றார் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் தேவராஜ் தனது மனைவியான பிரதிவாதியுடனும் அவரது குழந்தையுடனும் சேரந்து வாழ பாண்டிச்சேரி செல்ல முற்பட்டார் என்றாலும், நானும் எனது பெற்றோரும் தேவராஜை பிரதிவாதியுடன் சேர்ந்து வாழவிடாமல் தடுத்தோம் என்றாலும், அதன் காரணமாக தேவராஜ் 21.11.2020 அன்று தாவா சொத்தில் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. தேவராஜின் இறப்பு செய்தியை நாங்கள் பிரதிவாதிக்கு தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறை மூலமாக தெரிவித்தோம். அதன் பின்னர் தேவராஜின் பிரேதத்தை பிரதிவாதியிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். கே.எம்.சி. மருத்துவமனையிலிருந்து தேவராஜின்

பிரேதம் வந்தபோது நாங்கள் பிரதிவாதியை பிரேதத்தை பார்க்கவிடாமல் தடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் ஜே.ஜே நகர் காவல் நிலையத்திலிருந்து வந்து இருதரப்பினரிடமும் பேசி நாங்களும் பிரதிவாதிகளும் சேர்ந்து தேவராஜின் இறுதி சடங்குகளை செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. தேவராஜின் இறுதிசடங்க முடிந்த பிறகு நானும் எனது பெற்றோரும் சேர்ந்து பிரதிவாதியை அங்கிருந்து விரட்டினோம் என்று சொன்னால் சரியல்ல. 08.03.2021 அன்று முதலமைச்சர் தனிப்பிரிவு, சமூக நலத்துறை அதிகாரி திருவள்ளூர் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் திருவள்ளூர் அகிய இடங்களில் மனுக் கொடுத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து வந்து திருமங்கலம் காவல் துறையினர் வந்து எங்களிடத்தில் சாவியை பெற்று பூட்டை திறந்து பிரதிவாதியை தாவா சொத்தில் வசிக்க அனுமதித்து தற்போது வரை பிரதிவாதி தாவா சொத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 செட்டில்மென்ட் ஆவணம் எனது தகப்பனார் எனக்கு 14.12.2020 அன்று எழுதி வைத்த ஆவணம் என்றால் சரிதான். தேவராஜ் இறந்த 23 நாட்களில் நான் எனது தகப்பனாரை வற்புறுத்தி இந்த ஆவணத்தை ஏற்படுத்த வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண பத்திரத்தின் 6 வது பாராவில் எனது பெற்றோரின் மருத்துவ செலவிற்காக வெளியில் கடன் வாங்கி சிகிச்சை செய்தேன் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கடன் வாங்கியதற்கான ஆதாரங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மருத்துவ சிகிச்சை செய்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். அவ்வாறு உண்மையிலேயே கடன் வாங்கி சிகிச்சை செய்திருந்தால், அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

எனது தகப்பனார் இரண்டாம் வாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அவர் தற்போது நல்ல உடல் நிலையுடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**